REVISED

செ. கு. எண்:136 நாள் :11.11.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 11.11.2015

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 9.11.2015 அன்று கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், விசூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. உத்தரவேல் என்பவரின் மனைவி வாசுகி, மகள் கௌசல்யா, செம்மேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பச்சையப்பன் என்பவரின் மகன் அசோக்;

10.11.2015 அன்று கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டம், பெரியகாட்டுப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவசங்கரன் என்பவரின் மனைவி செல்வி, திரு. வீரமணி என்பவரின் மகன் சிவா, திரு. வீரன் என்பவரின் மனைவி செல்வி, மகன்கள் மாரிமுத்து, பெருமாள், வீரமுத்து, மகள் பவானி, திரு. சிவசங்கர் என்பவரின் மகன் தினேஷ், திரு. சிங்காரவேல் என்பவரின் மகன் நடேசன், திரு. சிவசங்கர் என்பவரின் மகள் பிச்சையம்மாள், குறிஞ்சிப்பாடி நகரத்தைச் சேர்ந்த திரு. ரத்தினம் என்பவரின் மனைவி உதயகுமாரி, பிள்ளையார்குப்பம் பகுதியைச் சேர்ந்த திரு. மாணிக்கவேல் என்பவரின் மகள் பூமிகா ஆகியோர் வெள்ள நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

9.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், குடிமியாண்டிதோப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்திரசேகர் என்பவரின் குழந்தை பவித்ரா; திருக்கழுக்குன்றம் வட்டம், புதுப்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பச்சிரத்தான் என்பவரின் மகன் நாயகம், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், தீரதனகிரி கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலமுருகன் ஆகியோர் சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், பிருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜீவா என்பவரின் மகன் அரிகிருஷ்ணன் மழையின் காரணமாக மின்கசிவு ஏற்பட்டு மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழகத்தில் பெய்து வரும் கன மழையின் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**

தமிழ்நாடு முதலமைச்சர்